ஜவாஹிறுல் பவாயித்

இப்புஸ்தகத்தில் 1-வது அல்லாஹு தஆலாவின் திருநாமங்களாகிய 'அஸ்மாஉல் ஹுஸ்னா' என்னும் அழகிய 99 இஸ்முகளும், ஒவ்வொன்றுக்கும் தனித் தனியே தர்ஜுமாக்களும், தக்ஸீறுகளும், காஸியத்துகளும், 2-வது 'அஸ்மாஉல் இலாம்' அதாவது நபிமார்கள் ஓதி வந்ததும் ஷருறை விட்டும் தனித்ததுமான 41 அஸ்மாக்களும் அவைகளில் வெளியாகும் அநேக கைபியத்து, அஜாயிபு, முஃஜிஸாத்து, அஸ்றூறு முதலான மட்டில்லாத பிரயோஜனங்களும், 3-வது 'ஹயாத்துல் ஹைவான்' என்னும் உயிர் பிராணிகளாகிய சகல ஜந்துக்களின் ஒவ்வொன்றின் குறை குணங்களும், அவைகளின் அவயவமென்னும் அங்கங்களால் மனிதர்களுக்கு உண்டாகும் பற்பல வியாதிகளுக்கு அவிழ்தங்களும், இன்னும் ஹதீதுகளும், ஹிக்காயத்துகளும், 4-வது மனுமுடைய தஃபீர் என்னும் கனவு நூலும், அதில் எவ்வண்ணமாய் கனவு கண்ட காஷிகளுக்கும் விரிவாகிய தஃபீர்களும், அதற்கு அத்தாக்ஷியாகிய அநேக ஹிக்காயத்துகளும், 5-வது வைத்திய சுருக்கமென்னும் சகல வியாதிகளுக்கும் நுட்ப பரிகாரங்களும், இன்னும் அநேக பாயிதாக்களும் இருக்கின்றன.

இவற்றில் இஸ்முகளை மாத்திரம் போட்டோ பிளாக் மூலம் அரபியிலும் மற்றவையெல்லாம் சுத்தத் தமிழாலும் அச்சிட்டு பைண்டு செய்யப்பட்டது.

விலை ரூ. 20-00

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 10, ஹைரோட், திருவல்லிக்கேணி, சென்னை 5.

தலை பாத்திஹா.

بسم الله الرحمن الرحيم
الحمد لله رب العالمين والصلوة والسلام
على سيد المرسلين محمد وآله وصحبه اجمعين

அம்மா பஃது.

இதனை அச்சிட்ட ஷாஹுல் ஹமீதுப்னு ஐதரூஸ், சொல்வதாவது, சிலான் தேசத்தில் அவாம்களால் இயற்றி நாதாக்களான முதியோர்கள் அதனை அழகாய் கண்டு அமல் செய்து வருகிறதைக் கீழக்கரையில் வாசஞ் செய்தடங்கிய அல் அல்லாமதுல் பாலிலு உஸ்தாதுனா ஸைய்யிது முஹம்மது மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ஸாஹிபு றஹ்மஹுல்லாஹு அறபு பைத்தாகவும் பாடல்களாகவும் நாயகி பாத்திமதுஸ்ஸுஹறா றலியல்லாஹு அன்ஹாவைக் கொண்டும் மற்றும் அஹ்லு பைத்துகளைக் கொண்டும் ஸாலிஹீன் ஸாலிஹாத்துகளைக் கொண்டும் வஸீலா தேடி சொல்லியதைக் கண்ணுற்ற எனது நேயர்கள் நான் இதனைப் பிழைகளற திருத்தஞ் செய்து தமிழில் ஸாஹீஹாய் அச்சிடும்படி என்னிடம் கேட்டுக் கொண்டபடியால் நான் கூடிய மட்டில் அதன் பிழைகளைத் திருத்தி சுத்தமாய் தமிழில் அச்சிட்டு வெளியாக்கினேன். இதனை ஓதி வருவதில் தீனிலும் துன்யாவிலும் மட்டிலடங்காத பாயிதாக்கள் உண்டாயிருக்கின்றன. இதன் பறக்கத்தால் நாடிய நாட்டங்கள் நிறைவேறினதைப் பல விடுத்தமும் அறியப்பட்டிருக்கின்றது.

பாத்திஹா சொல்லுகிறது

بسم الله الرحمن الرحيم
الى حضرة المصطفى احمد المجتبى محمدن المرتضى
رسول صلى الله عليه وآله وصحبه وسلم اجمعين الفاتحة

நாவையர் திலதமதான பைங்கிளி
பாத்திமத்தைப் புகழ்ந்தே துதிப்போம்

நேர்ச்சை நோன்பில் துயர்ச்சை நிறைவேற
நீடிய கத்தலினால் கெடியவன்

நீர்ச்சை துதி குர்ஆனில் செப்பிய
திவ்விய ஷபீ அத்தினை துதிபோம்

அல்லாஹு ஷப்பா அஹமா பினாஅவ
ரல்லாம லார்தனை கார்த்து நிற்போம்

நாகூத்து மர்ஜானை பழித்திடும்
யாசீனின் முத்தினை யாம் புகழ்வோம்

நிர்தவிசு சுந்துசினை உடுத்திடும்
பில்ஹஷ்ரி ஷாபி அத்தை நினைப்போம்

பாத்திமதுஸ் ஸஹ்றா பதூலே
பாக்கியமேவேறே யாரைச் சொல்வோம்

அஹ்லுல் அபாவெனும் ஐவர் தம்மினில்
ஆகிய நாயகியைத் துதிப்போம்

ஐந்து மறியைவிட்டே கலிமா
ஐந்தையுமே தெரிந்தோரை சொல்வோம்

தம்மிருபாத மல்லாது வேறொரு
தம்பமெமக் கில்லை லாகின் அறியோம்

ஆதி அலீபுலியின் மனைவியர்
அன்பான பாத்திமத்தை நினைப்போம்

காடு மலைகடல் கான கங்களில்
தேடும் பொருளுமைப் போல காணோம்

மைக்கா விருளதிலே மதியை
மன்னன் மாலிகவர்க்காய் வருத்திடும்

ஹக்கான தீன்பயிரேற்றும் காரணர்
கண்மணி பாத்திமத்தை கவல்வோம்

நற்திரு மேனியர் நல்கதீஜா
புத்திரி பாத்திமத்தை புகழ்வோம்

மாணிக்கமேடை குலாவு மாதரில்
காணிக்கை நாச்சியாரால் மகிழ்வோம்

நாஸித்த கிஸ்வதி உல்தி ஆதம்
யாசீன் முஹம்மது தம்மகளாய்

காசினியில் வெளியான கண்மணி
கைதாங்கு மெங்களை காலமெல்லாம்

அலா அபீகி தவாமன் ஸல்லா
அல்லாஹு காலிகுனாவ கைய்யூம்

செல்வம் எமக்கிது போல யொன்றும்
ஜெம்மத்தில் சம்பவிய்யாத்த தானோம்

வஅன்கி யற்ளல்லாஹு தவ்மா
வல்லாஹிநற்ஜூகி வேறே நாடோம்

அஹ்மது புத்திரன் சொல் துஆதனை
அல்லா கபூல்செய்ய ஆமீன் சொல்வோம்

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மத்
யாறப்பிஸல்லி அலைஹி வஸல்லிம்

பின்பு இந்த பைத்து ஓதவும்

மவ்லாய ஸல்லி வஸல்லிம் தாயிமன் அபதா
அலாஹபீபிக கைரில்கல்கி குல்லிஹிமீ

அல்லாஹ்வின் நாமங்கொண்டும் அவன் றன் புகட்சிகொண்
சொல்லும் ஸலாதுஸலாம் சொல்லித் துடங்குகிறேன் [டும்

மலையுச்ச தீபமொவ்வா மஹ்மூது மகள்புகழால்
தலைபாத்திஹா ஓத ஷவுகாய் துடங்குகிறேன்

தாஹா தவப்பொருளே சதுமா மறையருளே
வாகாயுமது புகழ் வாயால் துடங்குகிறேன்

கதீஜா தரும்கனியே ஹஸன் ஹுஸைனின் தாயகமே
மதியாத மாணிக்கமே மஹறூஜி பாத்திமத்தே

ஸைனபுறுகைய்யது தாஹிற் காஸிம் இப்றாஹீம்
தய்யிபு உம்மூகுல்தூம் சகோதரியே பாத்திமத்தே

வலியோன் வஹியதனால் மங்களவிவாகமுறும்
அலியார் மனைவியரே அருமையுள்ள பாத்திமத்தே

தேடாத் திரவியமே தேனின்ப கற்பகமே
கோடான கோடிதவம் கொண்டோருமதடியில்

நாடாதிருப்பவரோ நான்பாவி அவ்விதமே
பாடலறியாதிடினும் பாடினேன் பாத்திமத்தே

சூரியனும் சந்திரனும் சொல்லும் அபுலாக்கனைத்தும்
வாரிளனும் பஹ்றதுவும் வாழ்த்து மெங்கள் பாத்திமத்தே

மக்கள் குர்ஆனெழுத்தில் வரும்தர்க்க மாதிவிக்க
ஹக்கனுப்பும் கனியால் கல்புமகிழ் பாத்திமத்தே

சொர்க்கத்தின் பாலகரும் சோபனிக்கும் ஹூறுகளும்
பறக்கத்து மத்ஹு செய்யும் பைங்கிளியே பாத்திமத்தே

பிள்ளை பசியதனால் பாதிரவில் அலிசொல்லுக்காய்
தள்ளையிடம் சென்றுகொள்ளை சாத்ததனை வெறுத்ததனால்

உள்ளகலிமா ஐந்தையும் உரைத்தார் முஹம்மதென்றே
விள்ளவே அலிகமலம் விருப்பங்கொள்ளும் பாத்திமத்தே

ஷாம்றூம் இருகு எமன் ஸாரே ஜஹானனைத்தும்
தாம்கின் றிலங்கும் எங்கள் தாபரமே பாத்திமத்தே

ஸைலான் சரன்தீபில் சகலர் கொளும்புகழை
மைலாக ஓதுவதை மனங்குளிரும் பாத்திமத்தே

இம்மனையில் தாம்வருக இன்பமுற தான்வருக
எம்மத்லைஹ ஏந்துகொள்வா யெங்கள் சித்திபாத்திமத்தே

காயல்பதி பிறந்தோர் காமில் அஹ்மதுல் ஆலிம்
சேயாம் முஹம்மதென்போன் செய்கின்ற இந்த துஆ

தூயன் கபூலருள தும்சே சிபாரிசுவை
ஓயாமல் கேட்குகிறேன் உண்மையுள்ள பாத்திமத்தே

இந்த தலைபாத்திஹாதை இன்பமுறச் சொன்னவர்க்கும்
சிந்தை கொள்ள கேட்பவர்க்கும் சிறப்பாக கூடுவர்க்கும்

விந்தை விந்தையாம் விருந்தை விஸ்தீரணமாக்குவர்க்கும்
இந்தல் இலாஹிஷபீயீயாஸித்தி பாத்திமத்தே

இக்பிர்லனு வலஹும் இற்ஹம்வ ஆபிவஜுது
வஹ்மில்பலிய்யாதி அன்னு யாறப்ப பாத்திமத்தே

பின்பு தலை பாத்திஹா பெரிய பைத்து ஓதவும்.

ஸலாத்துன் வதஸ்லீமுன் வஅஸ்காத் தஹிய்யத்தி
அலல் முஸ்தபா வல்ஆலி பீகுல்லி உம்மதி
லகல்ஹம்து மில்அல் கவ்னி றப்பல் பரிய்யதி
பஸுப்ஹான கல்லாஹும்ம யாறப்ப இஸ்ஸதி.

இதன் பொருள்.

சொல்வதற் கரிதான சிறப்புடைய நாயனே, உன்னை நாங்கள் துய்தாக்கி தஸ்பீஹு செய்கிறோம். பலபல விதமான படைப்புகள் எறும்பு கடை யானை முதல் எண்பத்தினான்கு நூறாயிரம் ஜீவஜெந்து சகலதையும் அமைத்து, அவைகளுக்கு இரணமும் பாணியு மூட்டி, அன்னை தந்தையினும் அதிக கிருபையால் ஆளும் ஆண்டவா றஹ்மானே! எழுவான், புவி, அர்ஷு, குர்ஸி, லவ்ஹு, கலம், சுவர்க்கம், நரகம், அகண்ட வெளிமயம் அனைத்தும் நிறம்பிய புகழ்ச்சியின் வகையனைத்தும் உனக்கே உடைய தன்மையால் அவைகளில் நாங்களு மொரு வகையாய் நின்றுன்னை நாவினாலும் இருதயத்தாலும் செயலாலும் புகழ்கிறோம்.

பைத்து.

வஸல்லி வஸல்லிம் யாகரீமு அலன்னபீ
முஹம்மதினில் முற்வீ விஜம்யின் பிகத்றதி
வஅஸ்ஹாபிஹி வல்ஆலிமன் ஹாஜறால்ஹு
வகஸறாஹு வத்துப்பாயி பீகைரி மில்லதி.

இதன் பொருள்.

கௌஸரமற் கொடை கொடுக்கும் சங்கையாளர் அநேக சேனை படை கூட்டத்தின் தாகையை ஒரு சொட்டு தண்ணீரால் தாகம் தீர்க்கும் எங்கள் நயினார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மீதும், அவர்கள் கிளையார் மீதும், முஹாஜிரீன் அன்ஸாறு நாற்பத்திராயிரம் அஸ்ஹாபிகள் மீதும் நம்முடைய தீனுல் இஸ்லாம் எனும் ஏற்றமாகிய மார்க்கத்தில் அவர்களைத் தொடர்ந்தவர்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் சொல்லி யருள்.

பைத்து.

வநஸ்அலு நல்லாஹும்ம அப்வன் வறஹ்மதன்
வஇல்மன் யுஸப்பில் கல்பஅன் றைனி றீபதி.

இதன் பொருள்.

நாயனே எங்கள் பாவமனைத்தும் பொறுத்து உனது றஹ்மத்தைத் தந்தருளவும், எங்கள் கல்பைச் சந்தேகமென்னும் கறளை விட்டும் தெளிவாக்கும், இல்முல் ஆகிறு என்னும் இல்முல் யகீனையும் உன் பக்கல் கேட்கின்றோம்.

பைத்து.

விஹல்றதி கல்அல்யா மதத்னுஅ யாதியா
பிதுல்லின் வகவ்பின் மஃறஜாயின் வறகுபதி
பஆபிவ ஜூத்ஹா யாகரீமு பலாவலா
தறுத்தன்னஹா கத்மஸ்ஸஹா நம்மு கைபதி.

இதன் பொருள்.

அவழ்க்கையோடும் ஆசையோடும் தாழ்மையாலும் பயங்கரத்தாலும் உன்னுடைய தூய்மை பூர்த்த மேலான சமுகத்தளவில் எங்கள் கைகளேந்தி துஆ விரக்கின்றோம். ஆகையால் அந்தக் கைகளைப் பேர்கேடென்னும் துக்கம் பிடித்ததாய் அதுகளைத் தட்டி விடாமல் தேடிய

தேட்டத்தையும் நாடிய நாட்டத்தையும் நிறைவேற்றி இரட்சித்துக் காப்பாற்றியருள் சங்கையாளனே.

பைத்து.

பிஹக்கிக யாபாகி வபில் குதுபிகுல்லிஹா
வபிஸ்ஸூஹ்றபி வல்குற்ஆனி மஃஅற்ஷி-அல்மதீ

இதன் பொருள்.

என்றும் தரிபாடுள்ளவனே உன்னிடம் கேட்கிறோம் உனது பொருட்டினாலும், நான்கு வேதம் நூற்றுப் பத்து ஸூஹ்றபின் பொருட்டினாலும், மகாபார தூரமுள்ள அற்ஷு குற்ஆனின் பொருட்டினாலும்.

பைத்து.

வநூரீக மவ்லானல் ஹபீபி முஹம்மதி
வபாகீ ஊஸில் அஸ்மில்இளா மில் அஜில்லதீ
வபில் அன்பியா வர்றுஸ்லி குல்லன் வதவ் இஹீம்
வஅம்லாகி தஸ்பீஹின் பிகுற்ஸிக ஸப்பதீ.

இதன் பொருள்.

உனது கல்குகளை உண்டாக்கவேண்டி அவைகளுக்குக் கருவாக நீ அமைக்கின்ற உனது ஒளிவான ஹபீபு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பொருட்டினாலும் வல்லபம் தங்கிய மகாகனம் பொருந்திய உலுல் அஸ்மி என்ற எங்கள் தகப்பமார்களான ஆதம் நூஹு இபுறுஹீம் மூஸா ஈஸா அலைஹி வஸ்ஸலாத்து வஸ்ஸலாம் இவர்கள் பொருட்டினாலும் ஒரு லட்சத்திருபத்தினாலாயிரம் நபிமார்கள் முன்னூற்றிப் பதிமூன்று முறுஸல் நபிமார் அலைஹிஸ்ஸலாம் பொருட்டினாலும் அவர்கள் செய்யும் வணக்கத்தின் பொருட்டினாலும் அணியணியாய் நின்றுன்னை தஸ்பீஹு செய்யும் மலக்குகள் பொருட்டினாலும்.

பைத்து.

வஇஸ்ஸின் வபதுலின் பீபுயூதின் தலாததி
பிஅவ்ஸாபிஹா அன்ஸல்த நஸ்ஸன் பிஜூம்லதி

இதன் பொருள்.

நாயனே! உன்னுடைய வேதத்தில் நீ வர்ணித்த சிறப்பு தங்கிய பைத்துல் மஃமூர், பைத்துல்லா, பைத்துல் முகத்திஸ் இம்மூன்றின் சிறப்பினலும், வரிசையினலும் இதுகளில் உன்னை வணங்கும் மலக்குகள், மனுக்கள், ஜின்கள் செய்யும் பலபல இபாதத்தின் பறக்கத்தாலும்.

பைத்து.

வஹுர்மதி ஸித்தீகின் வபாறூகினல்கமீ
வஉதுமான வல்மவ்லா அலியின் வஸித்ததீ
ஸயீதின் வஸஃதின் தல்ஹதின் வஸுபைரிஹிம்
வஆமிரிஹிம் வப்னின் ஸிஅவ்பில் அஜில்லதீ

இதன் பொருள்.

இன்னும் எங்கள் நாயகமார்களான அபீகுஹாபா வுடைய குமாரர் அபூபக்கரினிஸ் ஸித்தீகி, இன்னும் கத்தாபுடைய குமாரர் உமர், இன்னும் அப்பானுடைய குமாரர் உதுமான், இன்னும் அபீதாலிபின் குமாரர் அலி றலியல்லாஹு அன்ஹும் ஆக இன்னுஐயர்கள், இன்னும் ஸைதுடைய குமாரர் ஸயீது, அபீவகாஸுடைய குமாரர் ஸஃது, உபைதுல்லா உடைய குமாரர் தல்ஹது, அவருடைய குமாரர் ஸுபைறு, ஜர்ராஹின் குமாரர் அபீஉபைதா, ஆமிற் அவ்புடைய குமாரர் அப்துர் றஹ்மான் றலியல்லாஹு அன்ஹும் ஆக இந்தப் பத்து பேருடைய பறக்கத்தாலும்.

பைத்து.

வஹம்ஸத வல்அப்பாஸி அம்மா நபிய்யினு
வஹஸனின் ஹுஸைனின் குர்ரதை தாதி ஸஹ்றதி

இதன் பொருள்.

எங்கள் நபியுடைய பிதாவின் சகோதரரான ஹம்ஸா அப்பாஸு றலியல்லாஹு அன்ஹுமாவின் பறக்கத்தாலும் பிரகாசத்தையுடைய பீவி பாத்திமா நாயகியின் இரு கண்

மணியான ஸெய்யிதினு இமாம் ஹஸன், ஸெய்யிதினு இமாம் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுமா உடைய பறக்கத்தாலும்.

பைத்து.

வஅஸ்ஹாபிதாஹா அஜ்மயீன வஅஹ்லிஹீ
வஇத்றதிஹி ஸுப்னின் னஜாத்திலி உம்மதீ

இதன் பொருள்.

உம்மத்துக்கள் ஹலாக்கெனும் கடலில் விழாமல் ஈடேற்றம் தரும் கப்பல்களான நபிநாயகத்தின் கம்பிராட்டிகள் பிச்சளத்தார் அஸ்ஹாபு அனைவருடைய பறக்கத்தாலும்.

பைத்து.

வபிப்னதி இம்ருனின் வபிந்தி மஸாஹிமீ
வஹவ்வா வஸாராதும்ம ஸப்ரூ வறஹ்மதீ
வஉம்மிதபீ ஹில்லாஹி ஜளன் வஸவ்ஜதீ
சுலைமான மஅஉக்தின் லிநீஷத்ரீ ஸீனதீ

இதன் பொருள்.

இன்னும் இம்ருனுடைய மகளார் மரியம், மஸாஹிமுடைய மகளார் ஆசியா இன்னும் மனிதருக்கெல்லாம் தாயாகிய ஹவ்வா, இபுறூஹீம் நபி மனைவியான ஸாரு, மூஸா நபி மனைவியான ஸப்ரூ, அய்யூப் நபியின் மனைவியான றஹ்மா இன்னும் இஸ்மாயீல் நபியுடைய தாயார் ஹாஜரா, சுலைமான் நபி மனைவியான பல்கீஸ், இன்னும் லோகத்தார் வடிவின் முழுவதிலும் பாதி வடிவுடைய நபி யூசுபின் சகோதரியான ரூஹீலு அலைஹிம் வ அலைஹி மிஸ்ஸலாம் இவர்களின் பறக்கத்தாலும்.

பைத்து.

வஅய்னன் ஸுலைகா இற்ஸி யூஸுப இன்னஹா
லகத்கான திம்ற அதில் அஸீஸி பினஸ்ஸதீ

இதன் பொருள்.

இன்னும் குர்ஆனின் நஸ்ஸின்படி அஸீஸு ராஜா வுக்கு மனைவியா யிருந்து பின் யூஸுபு அலைஹிஸ்ஸலா மூக்கு மனைவியாகி விட்ட ஸுலைகாவின் பறக்கத்தாலும்.

பைத்து.

வபிந்தின் அதீகின்மஃ பனுதிகுவைலிதி
வஸம்அத மஅஉமரின் வபிந்தி குஸைமதி

இதன் பொருள்.

இன்னும் உனது ஹபீபு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய நம்பிராட்டிகளான அதீகு அபூ பக்கர் றலியல்லாஹு அன்ஹு உடைய குமாரத்தி ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா, குவைலிது ராஜாவின் குமாரத்தி கதீஜா றலியல்லாஹு அன்ஹா, உமரிப்னில் கத்தாபு றலி யல்லாஹு அன்ஹு குமாரத்தி ஹப்ஷா றலியல்லாஹு அன்ஹாவின் பறக்கத்தாலும், ஸம்அதுடைய மகளார் சவுதா நாயகி, குஸைமா உடைய மகளார் ஸைனபு பறக் கத்தாலும்.

பைத்து.

வபிந்தின்லி ஜஹ்ஷின் தும்ம பிந்தில் முகைறதி
வபிந்தி அபீசுப்யான தும்ம ஸபிய்யதி.

இதன் பொருள்.

ஜஹ்ஷுடைய மகளார் ஸைனபு நாயகி, முகைறது டைய மகளாரான நபிக்குச் சொந்த மாமி ஆதிகா உடைய குமாரத்தி உம்முசல்மா, அபூசுபுயானுடைய மகளார் உம்மு ஹபீபா, ஹுயை உடைய மகளார் ஸபிய்யா றலியல்லாஹு அன்ஹுன்ன வறலீன அன்ஹு பறக்கத்தாலும்.

பைத்து.

வதமரூதி நுஃமானின் வஹாரிது வஹாரிதி
வபிந்தி ஹுதைலின் மஃஹிஷாமின் வஅம்றதி

இதன் பொருள்.

நுஃமானின் புதல்வி அஸ்மா நாயகி, ஹாரிதுடைய புதல்வி ஜுவைறது நாயகி, ஹாரிதின் புதல்வி மைமூனு நாயகி, ஹுதைலின் புதல்வி கவுலா நாயகி, ஹிஷாமுடைய புதல்வி ஸபிய்யா நாயகி, யஸீதின் புதல்வி அம்றது நாயகி றலியல்லாஹு அன்ஹுன்ன வறலீன அன்ஹு பறக்கத் தாலும்.

பைத்து.

வபிப்னதி தவ்தானின் வகல்பிய்யதின் ஷரூப்
வபிந்தை கிலாபின் மஃ ஸபா வபதீலதி

இதன் பொருள்.

தவுதானுடைய மகளார் உம்மு சுறைகு நாயகி, கல்பி கிளையிலுள்ள ஷிரூபு நாயகி, கிலாபு கிளையிலுள்ள ஆலியா நாயகி, கிலாபு கிளையிலுள்ள யஸீதின் புதல்வி அம்றது நாயகி, கைசுல் கிந்தீ புதல்வி பதீலா நாயகி றலியல்லாஹு அன்ஹு பறக்கத்தாலும்.

பைத்து.

வபிந்தி கதீமின் மஃஸரூரீஹி மாரியாஃ
வஜாரியதின் றைஹானதல் மபுறாறத்தீ

இதன் பொருள்.

ஹதீமுடைய மகளார் லைலா நாயகி பொருட்டாலும் ஆக இந்த நம்பிராட்டிகள் இருபது நாயகிமார் பறக்கத் தாலும் இன்னும் உனது ஹபீபின் சுர்ரியதுகளான ஷம் ஊனுல் கிபுதீ மகளாராகிய இபுறூஹீ மென்னும் குமார ருக்குத் தாயுமாகிய மாரியாஃ உம்மா பறக்கத்தாலும், ஷம்ஊனுல் னளிரீ மகளார் றைஹானது உம்மா பறக்கத் தாலும், ஸைனபு நாச்சியாரின் தன்கொடையான ஜாரியாஃ உம்மா றலியல்லாஹு அன்ஹுன்ன வறலீன அன்ஹு பறக்கத்தாலும்.

பைத்து.

வஅவுலாதி ஹிஷ்ஷு றபாயி தய்யிபி தாஹிரி
வகாஸிமி இபுறுஹீம அப்ளுயி ரிபுஅதீ
வபாதி மதஸ்ஸஹறு வஸைனப உக்த்திஹா
வஉம்மின்லி குல்தூமின் வஸித்தி றுகய்யதீ

இதன் பொருள்.

நபியுடைய சிறப்பு தங்கிய புத்திரர்களான நால்வர் புத்திரிகளான நால்வர் ஸெய்யிதினா தய்யிபு ஸெய்யிதினா தாஹிறு ஸெய்யிதினா காஸீம் ஸெய்யிதினா இபுறுஹீம், ஸித்துனா பாத்திமாஃ, ஸித்துனா ஸைனபு, ஸித்துனா உம்மு குல்தூம், ஸித்துனா றுகய்யா றலியல்லாஹு அன்ஹும் வறளா அன்ஹு பறக்கத்தாலும்.

பைத்து.

வபாகி தறுரீஹி வபித்தாபியீஹிமி
வஅற்காளி தீனில் ஹக்கிபைனல் அயிம்மத்தி

இதன் பொருள்.

நபி நாயகத்தின் பிச்சளத்தில் முன்னுள்ளவர்கள் அவர்களைத் தொடர்ந்தவர்கள், இன்னும் இமாம்களுக் கிடையில் உண்மையுடைய தீனுல் இஸ்லாமுக்கு ஆதார மான தூண்களுக்குச் சமானமானவர் பறக்கத்தாலும்.

பைத்து.

பிகூபிய்யி தாரின்தும்ம தாவில் மதீனதீ
வமிஸ்ரிய்யி மீலாதின் வஸவ்ரிய்யி பல்ததீ

இதன் பொருள்.

கூபாவில் சேர்க்கப்பட்ட நாபிதுடைய குமாரரான நுஃமான், இமாம் அஃளம் அபூஹனிபா, இன்னும் மதீனத்திலுள்ள அனஸு உடைய குமாரரான மாலிகு றஹிமஹுல்லாஹ் இன்னும் மிஸ்றில் பிறந்த இத்ரீஸு உடைய குமாரர் முஹம்மதுஷ்ஷாபியீ, இன்னும் ஸௌரி

லுள்ள ஹன்பல் உடைய குமாரர் அஹ்மதுல் ஹன்பல் றலியல்லாஹு அன்ஹும் உடைய பறக்கத்தாலும்.

பைத்து.

வஹுற்மதி மன்னுஹு மினல் கிளுரி பறகதன்
கஸெய்யிதினல் கறனீ வஅக்தாபி உம்மதீ
கஅபா துறாபின்மஃ யஸீதவ அபுதலீ
வஅப்ளுயி தீனுரின் வஅதுஹம குதுவதீ

இதன் பொருள்.

இன்னும் மாஉல் ஹயாத்தென்னும் புனலருந்திய ஸெய்யிதினா கிளுறு அலைஹிஸ்ஸலாம் என்னும் ஹயாத்து நபியால் பறக்கத்தைப் பெற்று விலாயத் தெனும் பட்டத் தைப் பெற்ற றுக்பாக்கள் நுஜபா, அப்தால், அவுதாது அக்யாறு, உறபா, அன்வாரு அகுதாபு கவுது என்கிற நாதாக்கள், அதெது போலென்றால் நம்முடைய நாயகம் உவைசுல் கறனீ அபூதுறாபின் னக்ஷபீ அபூயஸீதில் பிஸ்தாமீ அபூ அப்தில்லாஹில் குறஷீ இன்னும் மாலி குப்னு தீனார் இபுறுஹீமிபுனு அத்ஹம் றலியல்லாஹு அன்ஹும் போல் கொத்தவர் பறக்கத்தாலும்.

பைத்து.

வஷெய்கி ஜமீயில் அஸ்பியாயிஜுனைதி திஹிம்
வபில்குதுபி முஹ்யித்தீனி ஷெய்கித் தரீகதீ

இதன் பொருள்.

ஸூபிய்யாக்களுக் கெல்லாம் உஸ்தாதாகிய ஷெய்கு ஜுனைதுல் பகுதாதீ இன்னும் தரீகதுல் காதிரிய்யாவுக்கு ஷெய்காகிய குதுபுல் அகுதாபி ஸெய்யிது அப்துல் காதிறு முஹ்யித்தீனல் ஜைலானீ றலியல்லாஹு அன்ஹு பறக் கத்தாலும்.

பைத்து.

வபிஷ் ஷாதிலிய்யிஸ் ஸய்யிதில் குதுபிதுக்ரினா
வஅஹ்மத வல்பதவிய்யி பஹ்றைஹூ கேதீ

இதன் பொருள்.

நமக்குத் தங்கரிகமான குதுபு நாயகம் அபுல் ஹஸன் அலிய்யுஷ் ஷாதிலிய்யி இன்னும் ஸெய்யிது அஹ்மதல் கபீரிர் ரிபாயீ ஸெய்யிது அஹ்மதல் பதவிய்யி ஹகீகத்துடைய இல்மில் சமுத்திரமாகிய இந்த இரண்டு பேர் பறக்கத்தாலும்.

பைத்து.

வபிஸ் ஸெய்யிதில் ஜிஷ்தீ வஷாஹி மதாரிஹிம்
வபிஸ் ஸஹ்றவர்திய்யில் ஜலீலி பிஷாஹ்றதீ

இதன் பொருள்.

இன்னும் ஜிஷ்தியா, தபகாதிய்யா, ஸஹ்றவர்திய்யா என்கிற மூன்று வழிக்கும் மஷாயிகாகிய காஜா ஸெய்யிது முயீனுத்தீனுல் ஜிஷ்திவலிய்யில் ஹின்தீ அதாயிர் றஸூலி, காஜா ஸின்தா ஷாஹு மதார், காஜா ஷிஹாபுத்தீனஸ் ஸஹ்றவர்திய்யி றலியல்லாஹு அன்ஹும் பறக்கத்தாலும்.

பைத்து.

வஷாஹில் ஹமீதில் குதுபி வஸ்ஸைகிஸதகதீ
வஇக்வானிஹில் உலமாயி அப்தாலி துல்லதீ
வபிஸ்ஸெய்யி தில்ஹாதில் புகாரி முஹம்மதீ
வஉமறல் வலீ அய்னன் வஸாஹிபி பைஅதீ

இதன் பொருள்.

இன்னும் குதுபு ஷாஹுல் ஹமீதிஸ் ஸெய்யிது அப்துல் காதிரிஷ் ஷத்தாரீ அவுலியாக்கள் கூட்டத்தில் அப்தால்களான காஹிர் சுலைமானுல் ஆலிமில் வலி உடைய குமாரர்களான ஷெய்கு ஷம்சுத்தீன், ஷெய்கு அஹ்மது ஷெய்கு ஸதக்கத்துல்லா, ஷெய்கு ஸாம் ஷிஹாபுத்தீன், ஷெய்கு ஸலாஹுத்தீன் இன்னும் நமக்கு ஹாதியான ஸெய்யிது முஹம்மதுல் புகாரி உமர் வலியுல்லா இன்னும் நம்முடைய கை பிடியுடைய உஸ்தாது ஷெய்கு அப்துல் காதிரில் காதிரீ றஹிமஹுல்லா அவர்கள் பறக்கத்தாலும்

பைத்து.

அபின்னிஸ்வ தில்லாதீ அலைன மருதிபா
வபுகுனகதீறன் மின்ரிஜாலின் அஹிப்பதி
கறைஹானதின் ஷஃவானதின்வ னபீஸதீ
வமாஜிததின்மஃ அம்றதின் வபிதுஹ்பதீ
வருபி அதின் மைமூனதின்வ அபீறதீ
வருயிஹதின் மன்பூஸதின் ஸித்திகிஸ்வதீ

இதன் பொருள்.

உகப்பு தங்கிய அவுலியா மிகுதி பேரையும் மேலிட்டமர்த்தபாக்களால் உயர்ந்த நாச்சிமார்களான றைஹானதுல் ஹபஷிய்யா, மைமூனதுல் பதவிய்யா, நபீஸதுல் மிசுரிய்யா, ஷஃவானதுல் பஸரிய்யா, மாஜிததுல் குறஷிய்யா, ஹபீபுடைய மனைவி அம்ரு, அபீறதுல் ஆபிதா, ஹஸனுடைய மகளார் மன்பூஸா, துஹ்பதுல் மஹ்கூமா, நபீஸதுல் மிஸ்ரிய்யா, ருபிஅதுல் அதவிய்யா றலியல்லாஹு அன்ஹுன்ன பறக்கத்தாலும்.

பைத்து.

வபாகீ ரிஜாலில்லாஹி ஷர்கன் வமகுரிபா
வபில் முஃமினீனல் காமிலீனல் அவித்ததீ
வபிஸ்ஸாலி ஹாதில் முஃமினாதில் கவாமிலீ
வபில் ஆரிபாதில் ஆபிதாதில் அஇப்பதீ

இதன் பொருள்.

இன்னும் மஷ்ரிகு தொடுத்து மகுரிபு வரையிலுமுள்ள அவுலியாக்கள் சிறப்பமுள்ள ஈமானுடைய பிரசமாக்கப்பட்ட பத்தினி தனத்தையுடைய வணக்கக்காரர்களான ஸாலிஹான ஆண் பெண் சகலருடைய பறக்கத்தாலும் உன்னிடம் நன உள்ளச்சத்துடனும் பயங்காரத்துடனும் துஆ கேட்டு நிற்கிறோம்.

பைத்து.

பிஹப்பிக யாறஹ்மானு இய்யாஹு முஸ்தஜிப்
துஆனு வஇன்னப்குத் ஷுறாத்தல் இஜாபதீ

இதன் பொருள்.

ஆண்டவா றஹ்மானே நீ துஆவை கபூல் செய்யத் தக்க ஷுறுத்துகளை நாங்கள் இழந்த பாவிகளா யிருக்கிலும் இப்போது நாங்கள் சொல்லப்பட்ட பாராதுரமாகிய உன்னுடைய வேத முதல் சகல அன்பியா மலாயிக்கத்துகள் அவுலியா ஸாலிஹீன் சகலரையும் நீ பிரியம் கொண்டிருப்பதால் அப்பிரியத்தின் வசீலாவினாலும் பறக்கத்தாலும் எங்கள் துஆவை கபூல் செய்தருள்.

பைத்து.

அனிகு பிர்லனு வற்ஹம் வனவ்விற் குலூபனு
வஅல்ஹிம் லனத்தக்வா வபிக்ஹஷ் ஷரீ அதீ
வஇக்லாஸ அஃமா லின்வஅரினு ஹகாயிகா
பிலுத்பிக பில்அஷ்யா கமாஹீ பிதிக்கதீ

இதன் பொருள்.

எங்கள் பிழையும் பொறுத்துக் கிருபையும் செய்தருள் எங்கள் கல்புகளை ஒளிவாக்கி தகுவாவையும் ஷரீஅத்தின் விளப்பத்தையும் எங்களுக்கு உதிப்பாக்கியருள். அமலடங்கலுக்கும் றூஹாகிய இக்லாஸெனும் கலப்பறுதலையும் தந்து சகல வஸ்துவின் அகமியம் எவ்விதம் இருக்குதோ அவ்விதம் அறிகிற இல்மூல் மஃரிபாவையும் உன்னுடைய உட்கிருபையால் தந்தருள்.

பைத்து.

பயாகாபி யாஷாபிஷ்பி அம்ருள கல்பினு
வஅஜ்ஸாமினு வகுதுபுற் லனு புர்அதிம்மதீ
வஅன்புஸனு வல் அஹ்ல வல்மால ஸ=ன்மினத்
தவாஹீ வரிஸ்கன் தய்யிபன் துனகாபதீ

இதன் பொருள்.

போதுமான நாயனே சுவாத்தியமாக்குகிறவனே எங்கள் கல்பிலுண்டான வியாதிகள் சரீரங்களிலுண்டான

வியாதிகளடங்கலையும் சுகமாக்கியருள். உன் வேதக் கட்டளையின் துயர்ச்சையையும், பிறருடைய துயர்ச்சையையும் விட்டு நாங்கள் நீங்கும் படியான நல்நடத்தையை நற்குணங்களைக் கொண்டாடும்படி விதித்தருள். இன்னும் எங்கள் நபுசுகளையும் கூட்டம் குடும்பத்தாரையும் முதல்களையும் கால விரோத மென்னும் தங்கடங்களை விட்டும் காப்பாற்றி யாதொரு மிடுமைத்தனம் அன்னியே ஹலாலான ரிஸ்கையும் தந்தருள்.

பைத்து.

வபீஸாலிஹில் அஃமாலி தவ்வில் ஹயாத்தனு
வகுன்ஹைதுமா குன்னலனு அஹ்லநுஸ்றதீ

இதன் பொருள்.

ஸாலிஹாகிய அமல்களிலே எங்கள் வாழ்நாளை நீளமாக்கி நாங்கள் எவ்விடமிருந்தாலும் அவ்விடமெல்லாம் எங்களுக்கு உதவி செய்கிறவனாயிரு இன்னும்.

பைத்து.

வயா அற்ஹமர் றுஹமா தகப்பல் மதாபனு
வபத்தில் கதாயானு ஜமீஅன் பிஹஸனதீ

இதன் பொருள்.

கிருபையாளரிலெல்லாம் மிகுதி கிருபையாளா எங்கள் பாவங்களை மன்னிப்பதுடன் அதடங்கலையும் நன்மையானது கொண்டு பதல்செய்தருள்.

பைத்து.

வயாஹய்யு யாகய்யூமு பல்லிகு முரூதனு
ஸியாறத்து தாஹா பஅத ஹஜ்ஜின்லி மக்கதீ

இதன் பொருள்.

என்றும் தரிபாடுள்ள ஹயாத்தானவனே நாங்கள் மக்கத்தில் போய் ஹஜ்ஜூ செய்து தாஹா முஹம்மது ஸல்லல்

லாஹு அலைஹி வஸல்லமவர்கள் றவுளாவையும் ஸியா றத்து செய்து வரும்படியான எங்கள் முறாதை நிறை வேற்றியருள்.

ஃபைத்து.

வஹவ்வின் அலைனா சக்றதல் மவுத்தி முதுலிகா
பி அல்லானினா றுதுகன் பிதய்யிபி கல்மதீ
வஹஸ்ஸின் லனல் உகுபா வஹீனது மீதுனா
அதிகுனா லதீதல் மவ்தி மவ்த ஷஹாததீ

இதன் பொருள்.

நாயனே எங்கள் பேரில் மவுத்துடைய சக்ருத்து வருத்தத்தை லேசாக்கி கலிமா தய்யிபை எங்கள் நாவில் சுருங்கமாய் நடத்தாட்டி எங்கள் சொல்லால் செயலால் வினைவாலுள்ள அமல்களின் ஒடுக்கங்களை அழகான முத் திரையாக்கி நீ எங்களை மவுத்தாக்க நாடிய நேரத்தில் பீச பீல்காருடைய மவுத்தைப்போல் இன்பமாகிய மவுத்தைக் குடிப்பாட்டுவாயாக.

ஃபைத்து.

வமல்ஹதனா வஸ்ஸிஃ வனவ்விற் குபூறனா
பிறவ்ஹின் வறைஹானின் வபில்கவுலி தப்பிதீ

இதன் பொருள்.

நாங்கள் ஒரு சாய்ந்துகிடக்கும் இக்கட்டாகிய இருட் டறை என்னும் கபுறை விசாலமாக்கி ஒளிவாக்கியருள். றூஹத்து கொண்டும் பரிமளிக்கும் வாசம் கொண்டும் ஏது மொரு தீவினையும் நோவினையும் வேதனையும் வேடுதமும் அடாதிருக்கச்செய். பத்தாளென்னும் மலக்கு முன்கர் நகீரெனும் மலக்குகள் கேட்கும் கேள்விக் கெல்லாம் தரிபா டான சொல் கொண்டு ஜவாபு கொடுக்கும்படி தரிபாடாக்கு.

ஃபைத்து.

வ அவுஜஹனா பய்யினு இதா னஹ்னு நுஹ்ஷறு
வ அஃதி பியும்னா ஙிதாபன் விஹிஸ்பதி

இதன் பொருள்.

கபுறுகளால் எங்களை எழுப்பி மஹ்ஷறு வெளிக்கு அழைக்கப்படும் நேரம் எங்கள் முகங்களை ஒளிவினால் தெளிவாக்கி எங்கள் கடுத்தங்களை எங்கள் வலது கையில் தந்தருள்வாயாக.

ஃபைத்து.

வகல்பற்கி ஜவ்விஸ் ஸஸ்ஸிறுத வதக்கிலன்
மவாஸீன ஞமற்ஜூஹதன் பிஜமீலதீ

இதன் பொருள்.

ஏற்றம் பதினாயிரம், இறக்கம் பதினாயிரம், நடுவொத் தது பதினாயிரம் வருஷத்தடிபாடுள்ள ஸிறுத்துல் முஸ்த கீம் என்னும் பாலம் வாளிலும் கூர்மையாய் மயிரிலும் நேர்மையா யிருக்கும் பாலத்தில் எங்களை மின்வெட்டி மறைத்தது போல் கடத்தியருள். நன்மை தின்மை நிறுக் கும் தராசில் எங்களுடைய கொஞ்ச அமலுடைய நிறையை உனது வருசை றஹ்மத்தால் கனமாக்கியருள்.

ஃபைத்து.

வஸ்ஸில் லிவா அல்ஹம்தி வல்அற்ஷி குல்லனா
வஷப்பிஃபினா இத்தாக்கஷாபி அஉம்மதீ

இதன் பொருள்.

லிவாஉல் ஹம்தீ என்கிற கொடி நிழலையும் உன்னு டைய அற்ஷின் நிழலையும் எங்களுக்கு நிழலாக்கியருள், உம்மத்துகளடங்கலையும் மன்றுடும நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எங்களை மன் றூடிக் கரை சேர்க்கும்படி உதவி செய்தருள்.

ஃபைத்து.

பியவுமயபிர்றுல் மற்உமின் அக்ரிபாயிஹி
வயஜ்பூ ஹமீமுன் அன் ஹமீமின் பிவஹ்ஷதீ

வயவுமி துனுவ் விஷ்ஷம்ஸி வத்திபுஸி ஷாயிபு
வவளு இதவாதில் ஹம்ஸி ஹம்லன் கஸிக்ததீ
வயவுமிஷ~ கூஸில் பஸரி வல்கல்பு ஹாயிறுன்
வஸப்இ நவாஸில் முஜ்ரிமீன விஹா~தமதீ

இதன் பொருள்.

ஒரு மனிதன் தன் இனம், ஜனம், மனைவி மக்கள், சிநேகன் சகலரையும் கண்டு விரட்சி கொண்டு விரண்டோடும் நாள். இன்னும் அமழிகளால் ஹமல்காரி ஹமலை விழுகட்டி போல் விழுத்தாட்டி பாலகர் தலைரோமம் நரைத்து சூரியனை ஒரு வல்லய பிரமாணம் அடுப்பிவித்து நினைவு தடுமாறி பார்வைகள் ஏற சொருகி குற்றக்காரரின் முன்னெற்றி ரோமங்களை நரகத்தளவில் ஸபானியாக்கள் பத்திப் பிடித்திழுக்கும் நாள்.

பைத்து.

வகம்முஸ்ரிபின் யபுகி தமன் ஸாவிஹன் பிவா
துபூரன்ய அள்ளுல் கப்ப மின்தூலி ஹஸ்றதீ
வயாலைத உம்மீ லம்தலித்னீவ லைதனீ
கதை ரின்வஹு~ஒதின் ஸாபிஹின் கஅுறஅுஜ்ஜதீ

இதன் பொருள்.

இன்னும் கடப்புச் செய்த குற்றக்காரனின் எத்தனையோ பேர் கண்ணால் இரத்தமாய் அழுது கைசேதத்தின் நீளத்தால் கையைக் கடித்துக் கொண்டு எங்கள் ஹலாக்குடைய பாராதூரத்தை என்ன சொல்வோமென குளறுவார்களே அப்படிக் கொத்த நாள். இன்னும் கடலின் ஆழத்தில் நீந்தும் மீன் போல் அல்லது ஆகாயத்தில் பறக்கும் பக்ஷி போலாயிருக்க வேண்டுச்சுதே என்றும் என் தாய் என்னைப் பெறா திருக்க வேண்டுச்சுதே என்றும் குளறுகிற நாள். அந்நாளில் எங்கள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமை மன்ரூடும் படியாயும் எங்கள் நாயகி பீவி பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவையும் மன்ரூடும் படி செய் நாயனே.

பைத்து.

வஅய்ளன் பிமன் தஹ்ஹர் தஹா வஜ அல்தஹா
புலை அுதஹா~ அஹ்லன் லிஷப்அுதி நிஸ்வதீ

இதன் பொருள்.

இன்னும் எவரையும் மன்ரூடுவதற்குள்ள உரித்தாயும் நபி நாயகத்தின் ஈரல் துண்டமாயும் பாவத்தையும் மாதவிடாயையும் விட்டுத் துய்தாயுமாகிய பாத்திமா றலியல்லாஹு அன்ஹாவையும் எங்களுக்கு மன்ரூடும்படி செய்தருள்.

பைத்து.

வமின் ஹவுலி கவுதரி ஹிஸ்கினு பியமீனிஹீ
ஷருபன் பலா நளுமன்பு அய்துலி முத்ததீ

இதன் பொருள்.

நாயனே உனது ஹபீபு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஹவுளல் கவுதர் என்கிற ஆற்றின் தண்ணீரை நாங்கள் அருந்துவதால் அதற்குப்பின் ஒரு காலமும் தாகிக்க மாட்டோமே அவ்விதமான குடிப்பை அவர்களின் கையால் எங்களுக்குப் புகட்டியருள்.

பைத்து.

வபீகுறுபதில் பிற்தவுசி அத்கில் ஜமீஅுனு
வமின் தஹ்திஹல் அன்ஹாறு தஜ்ரீ வனிஃமதி
குஸைசன் பலா கவுலுன் வலானஸ்ப கத்துபல்
பிஹாதாப கில்மாஹுன் பிஅுகுவாபி பிள்வத்தி
வமின் ஸல்ஸபீலின் அஸ்கினு கஃஸ தௌபதி
வமின் தாவிகத்தஸ்னீமி ஜனன் பிஷர் பதீ

இதன் பொருள்.

இன்னும் பிறுதவுசெனும் சுவர்க்கத்தின் மாளிகையில் எங்களைப் புகுதுவிப்பாயாக. அதன் தாளாலே பாலாறு,

தேனாறு, மதுவாறு, கள்ளாறு இந்த நாலாறும் ஓடிக் கொண்டிருக்குமே அப்படிக் கொத்த சுவர்க்கம், அதன் குடிப்பு மிகவும் சுகம் கொடுக்கும். அதனால் மயக்கமும் லகரியும் உண்டாவதில்லை. அவ்விதமான சல்சபீலென்னும் முத்தி னொளிவையும் தெளிவையும் உபமானிக்கும் பால கர்கள் வெள்ளியின் கெண்டிகளரல் கொண்டு வந்து சுற்றி சுற்றித் திரிவார்கள்

பைத்து.

வஅத் இம்லனா மின்லஹ்மி தைரின் வபாகிஹா
சமாதஷ்தஹீ ஹின்னபுஸூவல் அய்னு லத்ததீ

இதன் பொருள்.

இன்னும் காட்சியால் கண்கள் இன்பம்கொண்டு கருத் துகள் இச்சித்தப்படி பலபல கனிகளாலும் பக்ஷியின் இறைச்சியாலும் ஒஜீபன மூட்டியருள்வாயாக.

பைத்து.

வமின் ஸூன்துஸின் இஸ்தப்ரகின் பகுசு னவமின்
ஹூலாஹாப அல்பிஸ்னா பிதா ஜில் கருமதி

இதன் பொருள்.

இன்னும் சுன்துசு இஸ்தப்றகு என்ற பட்டையும் உடுத்தாட்டி பலபல விதமான ஆபரணதியையும் சங்கை எனும் கிரீடமும் பூட்டியருள்.

பைத்து.

அலாறப்றபின் குளூரின் வஸூறுரின் றபீஅத்தி
வமவுளூனதின் பைனன்னமாரிகு ஸப்பத்தி

இதன் பொருள்.

பஞ்சவர்ண கட்டில்களின் மீது சருகைபாய் விரித்து அணியணியான தலகணை திண்டுகளின் மீது சாய்ந்தவர் களாக.

பைத்து.

வஸவ்விஜ் லனாயாறப்பு மின்ஹூரியீனிஹா
வஅல்ஹிகுஇலைனா மன்யலீகு லிகன்ஜத்தீ

இதன் பொருள்.

சொல்வதற்கரிதான அழகு சவுந்தரியமுள்ள ஹூறுல் யீனெனும் மாதரையும் கொஞ்சுதலுக் கிணங்கிய சந்திர சூரியனைப் பழிக்கும் மாந்தரையும் எங்களுக்கு ஜோடாக்கி செய்தருள்.

பைத்து.

பலம் கத்து கஸ்மஃபீஹி கய்ற மகாலத்தி
குஹாவஷ்றபூ முதஹன்னியீன பிரித்ததி
வகய்ற ஸலாமின் மின் ஸலாமின் வகவுலஹூ
குஹாதன் குஹாதன் பீகுஸூரின் ஸலாமத்தி

இதன் பொருள்.

சுகண்டி கொண்டு சோபனம் பெற்றவர்களாய் தின்னுங்கோ குடியுங்கோ என்ற சொல்லையும் ஈடேற்றம் தரும் நாயனிடத்தில் நின்றும் வரும் ஸலாம் ஸலாம் என்கிற சொல்லையும், ஸலாமத்துடைய மாளிகைகளில் நீடூழி வாழ்க! நீடூழி வாழ்க! என்கிற சொல்லையும் தவிர யாதொன்றையும் கேட்பதில்லை. அவ்விதமான ஜன்னத்துல் பிர்தவுசு அதில் மலக்குகள் சோபனம் சொல்வார்கள், அதாவது:—

பைத்து.

அய்யுஹல் காயிமூன ஜின்ஹல்லயாலீ
லிமூனா ஜாத்தி மன்ஹபாகும் ஸூஹதா
இஜ்தனைத்தும் மஹாரி மல்லாஹி கவுபா
வறஜா அன்லஹூ வதுல்தும் ஸூஜூதா
வனபைத்தும் ஸிவாஹூ எஹறன் வபதுனா
வபிஹக்கில் யகீனிதுகு தும்ஷூ ஹூதா
வமதைதும் னியாக திகுருஹூ ஹத்தா

பல்லகத்கும் மனுகஹல் மகுஸூதா
பனபிர்தும் பிதாரி இஸ்ஸின் வதிப்தும்
வஸமிஃதும் பிஹாகுலூதன் குலூதா

இதன் பொருள்.

உங்களுக்குச் சிதேவித்தனத்தைத் தந்த நாயனுடன் முனாஜாத்து செய்யவேண்டி இரவுகளினிருளில் நின்று வணங்கினரே அவனைப் பயந்ததுக்கும் ஆசை கொண்டதுக்கும் அவன் விலக்கல்களை தவிர்த்துத் தொழுகை முதலான வணக்கங்களை வாழ்வாக எடுத்துக் கொண்டீர்கள். அவனல்லாத வஸ்துவடங்கலையும் வாஹிறிலும் பாத்தினிலும் இல்லாமையாக கண்டு அவன் உஜூது உன்னையே தெரிசிப்ப தென்கிற அமிர்தத்தை அருந்திகுரெனும் ஒட்டகமேறி நடந்தீர்கள். அதின் கால் மடிக்கும் துறை என்னும் மகுஸூதை எத்திவிக்கும் வரையில் ஆகையால் சிறப்பு தங்கிய இந்தப் பொண்ணுலகத்தில் ஜெயம் பெற்றீர்கள். வாசம் பெற்றீர்கள். அதில் நீடூழி வாழுங்களென்ற சோபனச் சொல்லும் கேட்டீர்களென்ற மதுரம் பொருந்திய இம்மொழிகள் நடக்குமே அவ்விதமான சுவர்க்கம் இன்னும்

பைத்து.

வஅஹ்ளிற்ன பிஇற்ஸிதாஹா பிமற்யமீ
வஆஸியத்தின் வுக்காப மஹ்மூதி பீலத்தி

இதன் பொருள்.

அன்பியா, அவ்லியா, ஸாலிஹீன் சகலரையும் ஜன்னத்தில் நின்றும் ஒரு தலத்தில் சேகரித்து நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுக்கும் பீவி மற்யம், பீவி ஆஸியா அலைஹி மஸ்ஸலாமுக்கும் திருமணக் காட்சி பெற வேண்டி ஒளிவுதங்கிய மஹ்மூ தெனும் யானையிலேறிப் பவனி வரும் அக்கூட்டத்தி லெங்களையும் சேர்த்தருள்.

பைத்து.

வஆதிலனு அகுயாக்க ஹத்தான ருக்கமா
ஷஹிதுனபி அய்னில் கல்பி தாகதுமூ மூன்யத்தி

இதன் பொருள்.

நாயனே சகல கிஸ்மத்திலும் அதிகமான உன்னுடைய லிகா வென்னும் பெருவாழ்வைத் தந்தருள். நாங்கள் கல்புக் கண்ணினல் எதுமொரு ரூபசுரூபம் பாங்கு பரிசுமட்டுத் திட்ட மன்னியில் தெரிசித்தது போல் நீ நாடிய விதத்தில் காட்சியை நாங்கள் பெற்றுக் கொள்ளும் வரையில் அதாவது நாட்டம் தேட்டம் சகலதும் முடியும் முத்திரையா யிருக்கும்.

பைத்து.

தகப்புல் துஆன வஸ்தஜீபு பலகத்தன
பிஹலா வஉகுரு யாமுஹஸ்ஸில கிய்யத்தீ

இதன் பொருள்.

நாட்டத்தை நிறைவேற்றும் நாயனே துன்யாவிலும், ஆகிரத்திலும் சகல புகட்சியும் உனக்கானதால் எங்கள் துஆவை கபூல் செய்.

பைத்து.

பஸல்லி வஸல்லிம் மாததாமூ அலன்னபீ
வஅஸ்ஹாபிஹி வல்ஆலி பீகுல்லி உம்மத்தி

இதன் யொருள்.

நாயனே நீ தாயிமா யிருக்கும் காலமெல்லாம் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மீதும் அவர்கள் கிளையார் தோழமார் துயர்ந்தவர் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் சொல்லி யருள்.

பின்பு நிலை பாத்திஹாவின் பைத்து

யாகுர்ரதல் முஸ்தபஸ் ஸஹ்று றலியல்லாஹ் அன்கி
யாதுர்ர தன்னிஸ்வானிஷ் பயீன இலல்லாஹ்

